# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

## அரையாண்டுத் தேர்வு - 2011 -2012

## வளர்தமிழ் 11

சுட்டெண்:........................................................ நேரம்: 180 மணித்துளிகள்

**1) வினாக்களுக்கு மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்து, விடைக்கான எழுத்துக்குரிய கூட்டில் புள்ளடி இடுக.**

1. தமிழின் இனிமையைக் குறிக்கப் பயன்படும் பெயர்

அ) பைந்தமிழ் ஆ) தேன்தமிழ் இ) செந்தமிழ் ஈ) முத்தமிழ்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

2. கோவலன் கொலையுண்ட இடம்

அ) மதுரை ஆ) காஞ்சி இ) பூம்புகார் ஈ) சோழநாடு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

3. குடிமக்கள் காப்பியம் என அழைக்கப்படுவது

அ) மணிமேகலை ஆ) வளையாபதி இ) சிலப்பதிகாரம் ஈ) குண்டலகேசி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

4. யாழ் நூலகம் எரிக்கப்பட்ட ஆண்டு

அ) 1981 ஆ) 1991 இ) 1881 ஈ) 1911

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

5. வெள்ளைப் பூனை பால் குடித்தது. இதில் வந்துள்ள வெள்ளை என்பது

அ) செயப்படுபொருள் அடைமொழி ஆ) எழுவாய் அடைமொழி

இ) பயனிலை அடைமொழி ஈ) அடைமொழி இல்லை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

6. மானிடா சொல் என்ற பாடலை எழுதியவர்

அ) இரவி  ஆ) அம்பி  இ) உதையை வீரையன்  ஈ) சாலை இளந்திரையன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

7. ஓங்கு புகழ் கல் எனக் குறிப்பிடப்படுவது

அ) நடுகல்  ஆ) வைரக்கல்  இ) செங்கல்  ஈ) மாணிக்கக் கல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

8. வெண்சுவர் என்பது

அ) வினைத்தொகை ஆ) பண்பத்தொகை இ) வேற்றுமைத்தொகை ஈ) உவமைத் தொகை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

9. கண்ணகியின் சிலம்பிற்குள் இருந்தவை

அ) வைரம்  ஆ) மணிகள்  இ) மாணிக்கம்  ஈ) வைடூரியம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

10. மாவாரி என்று குறிப்பிடப்படுவது

அ) ஆழி  ஆ) கிணறு  இ) குளம்  ஈ) ஆறு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

11. பின்வருவனவற்றுள் உம்மைத்தொகை

அ) வளர் தமிழ்  ஆ) இராப்பகல்  இ) வட்டக்கல்  ஈ) வீடு கட்டினான்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

12. பவளவாய் என்பது

அ) உருவக அணி ஆ) தற்குறிப்பேற்ற அணி இ) உவமை அணி ஈ) சிலேடை அணி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

13. பின்வருவனவற்றுள் குற்றியலுகர எழுத்து அல்லாதது

அ) மு  ஆ) டு  இ) று  ஈ) கு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

14. கன்னங்கரிய என்பது

அ) அடுக்கிடுக்குத் தொடர்  ஆ) இரட்டைக்கிழவி

இ) அடுக்குத் தொடர்  ஈ) இணைமொழி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

15. மகனுக்குக் கொடுத்தான் இதில் வந்துள்ள வேற்றுமை

அ) 2ம் வேற்றுமை ஆ) 3ம் வேற்றுமை இ) 4ம் வேற்றுமை ஈ) 1ம் வேற்றுமை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

16. ‘‘சாம்பல் மேட்டிலிருந்து ஒரு நூலகம்’’ என்று எழுதியவர்

அ) ஏ. ஐ. குணதிலக ஆ) ம. குணவர்த்தன இ) எம். ஏ. நுஃமான் ஈ) டீ. குணதாச

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

17. வறுமையிலும் செம்மையாய் இரு என்ற கருத்தை விளக்கும் பழமொழி

அ) சுடர்விளக்கானாலும் தூண்டுகோல் வேண்டும் ஆ) இரக்கப் போனாலும் சிறக்கப் போ

இ) குடிப்பது கூழ் கொப்பளிப்பது பன்னீர் ஈ) ஏழை சொல் அம்பலம் ஏறாது

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

18. மண் + குடம் என்பதைப் புணர்த்தினால்

அ) மண்குடம் ஆ) மட்குடம் இ) மங்குடம் ஈ) மண்ங்குடம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

19. ஓடிய குழந்தை இதில் ஓடிய என்பது

அ) பெயரெச்சம் ஆ) பெயர்ச் சொல் இ) வினையெச்சம் ஈ) வினையடை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

20. மாசாத்துவன் என்பது குறிப்பது

அ) நகை வணிகனை ஆ) கடல் வணிகனை இ) உடை வணிகனை ஈ) நில வணிகனை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

21. பொற்றொடி என்பது

அ) உவமைத்தொகை ஆ) அன்மொழித்தொகை

இ) வினைத்தொகை ஈ) வேற்றுமைத்தொகை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

22. பொதுமக்களுக்காக ஆடப்படும் கூத்து

அ) வேத்தியல் இ) மனிதவியல்

ஆ) பொதுவியல் ஈ) பதவியல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

23. பூவனம் என்பது

அ) மாஞ்சோலை ஆ) தென்னஞ்சோலை இ) பூஞ்சோலை ஈ) பனஞ்சோலை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

24. ''அன்பே தெய்வம்'' என்ற கவிதை வரி இடம்பெற்ற கவிதைத் தலைப்பு

அ) மானிடா சொல் ஆ) ஓங்குபுகழ் கற்கள் இ) ஓடிடும் தமிழா ஈ) இனியும்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

25. மாற்றான் என்ற சொல் குறிப்பது

அ) நண்பனை ஆ) பகைவனை இ) உறவினரை ஈ) அரசனை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

26. வேற்றுமைத் தொகைக்கு எடுத்துக்காட்டு

அ) கல்லெறிந்தான் ஆ) விளைபயிர் இ) பசுந்தோகை ஈ) சேரசோழபாண்டியர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

27. வெள்ளை அடித்தான் என்பது

அ) இடவாகு பெயர் ஆ) குணவாகு பெயர் இ) சினையாகு பெயர் ஈ) காலவாகு பெயர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

28. கோவலன் பெண்ணாக உருவகித்துப் பாடிய ஆறு

அ) கங்கை ஆ) யமுனை இ) காவேரி ஈ) சிந்துநதி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

29. ''புத்தரின் படுகொலை'' என்ற கவிதையை எழுதியவர்

அ) இளங்கோவடிகள் ஆ) இரவி இ) நுஃமான் ஈ) செல்லப்பா

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

30. செந்தாமரை விரியத் தேமாங் கொழுந்தொழுக வந்தது

அ) இளவேனில் ஆ) தென்றல் இ) காவிரி ஈ) கார்காலம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

(புள்ளிகள் 30)

## 2) தரப்பட்டுள்ள இலக்கண / மொழியியல் வினாக்களுக்கு விடை தருக.

1. தொகைகள் எத்தனை? வேற்றுமைத்தொகையை எடுத்துக் காட்டுடன் விளக்குக.

________________________________________

________________________________________

2. பெயர்ச்சொல்லின் வகைகள் எத்தனை? ஒவ்வொன்றுக்கும் எடுத்துக்காட்டுத் தருக.

________________________________________

________________________________________

3. வெள்ளம் வருமுன் அணைகட்ட வேண்டும் - பழமொழியின் கருத்தை விளக்குக.

________________________________________

________________________________________

4. இருபெயரொட்டுப் பண்புத்தொகைக்கு இரண்டு எடுத்துக்காட்டுகள் தருக.

________________________________________

________________________________________

5. பின்வரும் சொற்களுக்குப் பொருள் தருக.

| | | | |
|---|---|---|---|
| 1. ஆயர் | ____________ | 4. பாங்கியர் | ____________ |
| 2. ஏறு | ____________ | 5. மிடறு | ____________ |
| 3. சீற்றம் | ____________ | 6. விதி | ____________ |

(புள்ளிகள் 15)

## 3) பாடலை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.

அன்னை தந்த பால் ஒழுகும் குழந்தை வாய் தேன் ஒழுக அம்மா என்று
சொன்னதுவும் தமிழன்றோ! அக்குழந்தை செவியிலே தோய்ந்ததான
பொன்மொழியும் தமிழன்றோ! புதிது புதிதாய்க் கண்ட பொருளினோடு
மின்னியதும் தமிழன்றோ விளையாட்டுக் கிளிப் பேச்சும் தமிழே அன்றோ!

வானத்து வெண்ணிலவும் வையத்தின் ஒலியும் தரும் வியப்பைத்
தேனொக்கப் பொழிந்ததுவும் தமிழேயன்றோ தெருவில் உறுமக்கன் தந்த
ஊனுக்குள் உணர் வேயும் தமிழன்றோ! வெளியேயும் உள்ளத்துள்ளும்
தான் விரும்பும் அனைத்துமே காட்சிதரும் வாயில் எல்லாம் தமிழேயன்றோ

திருமிக்க தமிழ்க்குடும்பத்தீர்! செந்தமிழுக்கே
வருமிக்க தீமையினை எதிர்த்திடுவீர் நெஞ்சாலும் வாய்மையாலும்.
பொருள் மிக்கத் தமிழ்மொழிக்குப் புரிந்திடுவீர் நற்றொண்டு புரியீராயின்
இருள் மிக்கதாகிவிடும் தமிழர்களின் இனியவாழ்வு.

1. குழந்தையின் செவியில் எது தோய்ந்தது என்று கவிஞர் கூறுகின்றார்?

___________________________________

___________________________________

2. எவை வியப்பைத் தருவதாகக் குறிப்பிடப்படுகின்றது?

___________________________________

___________________________________

3. எதனை எதிர்க்குமாறு இப் பாடலில் கூறப்படுகின்றது?

___________________________________

___________________________________

4. எதற்குத் தொண்டு புரியும்படி கவிஞர் கட்டளையிடுகின்றார்?

___________________________________

___________________________________

5. இப்பாடல் பற்றிய உமது கருத்து யாது?

___________________________________

___________________________________

(புள்ளிகள் 10)

## 4) தரப்பட்டுள்ள பாடநூல் வினாக்களுக்கு விடைதருக.

1. இறைவன் விரும்பும் கோயில் எது என்று கவிஞர் இரவி கூறுகின்றார்?

2. யாழ் நூலகம் எரிக்கப்பட்ட செய்தியைக் கேட்டு உயிர்நீத்த அருட்தந்தை யார்?

3. இக்காலக் கவிதை என்னும் பாடத்தில் உமது உள்ளத்தைக் கவர்ந்த கவிதை எது? ஏன்?

4. பாண்டிய மன்னன் உயிர்விடும் பொழுது உரைத்தவை எவை?

5. இலங்கையில் கண்ணகிக்கு கோயில் கட்டிய மன்னன் யார்?

(புள்ளிகள் 15)

5) **பந்தியை வாசித்து, கீழுள்ள வினாக்களுக்கு முழுவிடை தருக.**

அன்று அந்த யாழ் முற்றவெளியில் ஐம்பதினாயிரம் தமிழர் கூடியிருந்தனர். அனைவரும் தமிழர்கள். ஒலிபெருக்கி வழியே அமிழ்தமாகத் தமிழ்மழை பொழிய அதைக் கேட்டுக் கொண்டிருந்தனர். செந்தமிழர், தீந்தமிழர், பைந்தமிழர் என்றெல்லாம் செந்தமிழைத் தேர்ந்தெடுத்துச் சுவையூட்டும் தொடர்களாக்கி இனிமையான நடையில் எடுப்பான குரலில் தமிழைப் பொழிந்து கொண்டிருந்தார் தமிழ்ப்பேராசிரியர் ஒருவர். அதனைச் செவிவழி மாந்திக் கொண்டிருந்தனர் கூட்டத்தினர். அங்கே தெய்வத் தமிழ் வழிபாட்டில் கரடி புகுந்தது போல் காவல் துறையினர் புகுந்தனர். கண்ணீர்ப் புகைக் குண்டுகளை மக்கள் மீது வீசினர். மின்கம்பிகள் மீது சுட்டனர். குண்டாந்தடிகளால் தாக்கினர். சப்பாத்துக் கால்களால் தமிழர்களை உதைத்தனர்.

கூட்டத்தில் அமளி: அல்லோல கல்லோலம், கண்ணீர்ப்புகை கண்களை எரித்தது. மூக்கினை அடைத்தது. கண்ணீர் விட்டனர். தண்ணீர் தேடினர். மூக்கில் நீர் சிந்தினர். நாக்கு வறண்டு அழுதனர். முகத்தைத் துணியால் மூடினர். தடுக்கி விழுந்தனர். சிதறி ஓடினர். காவல்துறையினர் பெண்களின் ஆடைகளைக் களைந்தனர். ஆண்களின் வேட்டிகளை அவிழ்த்தனர். உடைமைகளைக் களவாடினர். தீயவார்த்தைகளால் தமிழரை இழித்துரைத்தனர்.

முன்னர் யாழ்ப்பாணத்தில் தமிழ் மன்னன் சங்கிலியன் தலைமையில் போர்த்துக்கேயப் படைகள் போரிட்ட போது தமிழ்ப்படைகள் முன்னேறி வெற்றிவாகை சூடும் நேரத்தில் காக்கை வன்னியன் என்ற இரண்டகனால் சங்கிலியன் காட்டிக் கொடுக்கப்பட்டான். அதனால் போர்த்துக்கேயர் சங்கிலியனைச் சிறைப்பித்தனர். தமிழர் படை நிலை குலைந்தது. வெற்றியை முழுமையாக்க முடியாமல் தவித்தது. இவர்கள் போர்வீரர்கள் போரிட வந்தவர்கள்.

ஆனால் 1974ல் யாழ்ப்பாணம் முற்றவெளியல் சிதறி ஓடிய தமிழர்கள் போரிட வரவில்லை. நான்காவது தமிழாராய்ச்சி மாநாட்டிற்கு வந்தவர்கள். ஆண்கள், பெண்கள், பெரியோர், இளையோர், சிறியோர் என ஒன்று திரண்ட சூழ்ச்சி ஏதும் அறியா அப்பாவித் தமிழர், தமிழ்மொழின் சுவையைப் பருக வந்தவர்கள். அங்கு நடைபெற்ற கூட்டம் தமிழர் கூட்டமென்பதால் தாக்கப்பட்டார்கள்.

1. தமிழாராய்ச்சி மாநாடு எங்கே நடைபெற்றது?

________________________________________________

________________________________________________

2. தமிழர் எவ்வெவ்ப் பெயர்களால் அழைக்கப்பட்டனர்?

________________________________________________

________________________________________________

3. சங்கிலி மன்னனைக் காட்டிக் கொடுத்த இரண்டகன் யார்?

________________________________________________

________________________________________________

(புள்ளிகள்10 )

4. தமிழாராய்ச்சி மாநாட்டிற்கு வந்தவர்கள் ஏன் தாக்கப்பட்டார்கள்?

________________________________________

________________________________________

5. இப்பந்தியில் இருந்து நீர் விளங்கிக் கொள்வது யாது?

________________________________________

________________________________________

**6) பந்தியை மூன்றில் ஒரு பகுதியாகச் சுருக்கி எழுதுக.**

மாறன் அன்பும் அறிவும் பண்பும் உடைய சிறந்த பையன். அவனை எல்லோரும் விரும்புவார்கள். ஏனென்றால் அவனின் மனம் தூய்மையானது என்பது எல்லோருக்கும் தெரியும். எறும்பு போன்று எந்நேரமும் சுறுசுறுப்பாக இருப்பான். காந்தம் போன்று எல்லோரையும் தன் பால் ஈர்த்து வைத்திருப்பான். கனவில் கூட யாருக்கும் தீமை நினைக்க மாட்டான். தன்னைப் போலவே தன் நண்பர்களையும் மாற்றினான். அவனுடன் நட்புக் கொள்ள எல்லோரும் ஆசைப்பட்டனர். மாறனுடைய ஆசிரியர், உறவினர்கள், அயலவர்கள் எல்லோரும் அவனைத் தன் பிள்ளையாகவே எண்ணி மகிழ்ந்தனர். மாறனும் தன் குடும்பத்திற்கும் தன் குமூகத்திற்கும் தன் இனத்திற்கும் தன் தாய் நாட்டிற்கும் என்றும் சிறந்த பிள்ளையாகவே தான் வாழ்நாள் முழுவதும் வாழவேண்டும் என்று விரும்பினான். அதே போன்று இன்று வரைக்கும் தன் நல்ல குணம் மாறாமல் அன்புடனும் பண்புடனும் பணிவுடனும் வாழ்ந்து வருகின்றான். நாங்களும் மாறனைப்போல் வாழ்வோம்.

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

(புள்ளிகள் 05)

7) **தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து, 250 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை** எழுதுக.

1. சிலப்பதிகாரத்தில் உம்மைக் கவர்ந்த பாத்திரம் எது? ஏன்?
2. யாழ் நூலகம் பற்றி நீர் அறிந்தவற்றைத் தொகுத்து எழுதுக.
3. தாய் நாடும் தாய் மொழியும்.

(புள்ளிகள் 15)